# ஆண்டின் பொதுக்காலம் 28 ஆம் வாரம்

*திருவழிப்பாட்டு ஆண்டு* B (*11-10-2015*)

இன்றைய நற்செய்தி வாசகங்கள்

1. சாலமோன் ஞானம் 7:7-11
2. எபிரேயர் 4:12-13
3. மாற்கு. 10:17-30

## திருப்பலி முன்னுரை -1

இறையாட்சிக்குரியவர்களே, திருப்பலி வழிபாட்டில் பங்கேற்க வந்திருக்கும் இறைமக்கள் அனைவருக்கும் என் அன்பு வாழ்த்துகள். ஆண்டின் பொதுக்காலம் 28 ஆம் வாரத்திலிருக்கிற நாம், நாம் பெற்றிருக்கிற கொடைகள், ஆற்றல்கள், சிறப்பான வாய்ப்புகள், திறமைகள் போன்றவற்றை எப்படிப் பார்க்கிறோம். இவற்றிலெல்லாம் இறைவனின் கரம் நம்மோடிருந்து நம்மை சிறப்பிக்கிறது என்று பார்ப்பதோடல்லாமல், எல்லாவற்றிலும் இறைவன் நம்முடன் இருக்கிறார் என்றுணர்ந்து அவருக்கு நன்றியுடையவர்களாய் வாழ இன்று தூண்டப்படுகிறோம்.

இறைவனின் வார்த்தையே நமக்கு ஞானமும், சக்தியும், வல்லமையுமாய் இருக்கின்றது என்பது இன்றைய இத் திருப்பலியின் மையக் கருத்தாக உள்ளது. அதாவது, கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது: இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது: ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது: எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது: உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது என்னும் வார்தைகள் இவ்வுண்மையை மேலும் வலுப்படுத்தி நிற்கின்றன. எனவே நாம் நிலை வாழ்வை உரிமையாக்கிக்கொள்ள இறைவனுடைய நெறிமுறைகளைச் சரியான முறையில் கடைப்பிடித்து, தீமைகளை விட்டொழித்து புனித வாழ்வு வாழ இத்திருப்பலியில் வரங்கேட்டுச் செபிப்போம்.

## திருப்பலி முன்னுரை -2

இறைவனுக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தெட்டாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். கடவுளைவிட உலகப் பொருட்களில் அதிகப் பற்று வைக்கும் எவரும் இறையாட்சில் நுழைய முடியாது என்பதை உணர இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. மனிதர்களாகிய நாம் அனைவரும் கடவுளை அறிந்து, அவரை அன்புசெய்து வாழவே படைக்கப்பட்டிருக்கிறோம். இறை உறவிலும், மனித உறவிலும் நாம் வளர்ச்சி காண கடவுள் வழங்கியுள்ள பத்து கட்டளைகள் நமக்கு வழிகாட்டுதலாக அமைந்துள்ளன. அவற்றைச் சுருக்கி ஒரே அன்பு கட்டளையாக இயேசு நமக்கு வழங்கினார். நமது அன்பு செயல் வடிவம் பெறும் பொழுதுதான் நாம் இறையாட் சிக்கு நெருக்கமானவர்களாக மாற முடியும். செல்வம், உறவு, புகழ் என எது அன்புக்குத் தடையாக இருந்தாலும் அங்கு இறையாட்சி தடுக்கப்படுகிறது. உலகப் பொருட்களைப் புறக்கணித்து இறையாட்சியை விரும்பித் தேடும் நல்ல மனம் வேண்டி, இந்த திருப்பலி யில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**எங்கள் ஆயரே இறைவா,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமது திருச்சபையின் மக்கள் அனைவரையும் உம்மோடும், பிறரோடும், இயற்கையோடும் நல்லுறவு கொண்டவர்களாய் உருவாக்கத் தேவையான அருளை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**ஞானத்தின் ஊற்றாம் இறைவா,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமது ஞானத்தின் ஆவியால் நிரப்பப்பெற்று, திருச்சபையின் மக்கள் அனைவரையும் ஞானத்தில் வழி நடத்த தேவையான அருளை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**வாழ்வின் ஊற்றாம் இறைவா,**

உலக நாடுகளை ஆட்சி செய்யும் தலைவர்கள் அனைவரும் மக்களை வாழ்வின் பாதையில் வழிநடத்தவும், போர், தீவிரவாதம், வன்முறை, கலவரம் போன்ற அழிவுக்குரிய செயல்களில் இருந்து மக்களை விலக்கிப் பாதுகாக்கவும் தூண்டுதல் அளிக்க வேண்டு மென்றும், எம் நாட்டு மக்கள் அனைவரும் உண்மை, நீதி, அமைதி உண்மை ஆகியவற்றை விரும்பித் தேடவும், அதன் வழியாக உமது உண்மையான அன்பையும் இரக்கத்தையும் உணர வும் துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**நீதியின் ஊற்றாம் இறைவா,**

உலகில் பண ஆசை, பதவி மோகம், மத வெறி, தன்னலம், இன வெறி போன்ற காரணங் களால் நீதி மறுக்கப்படும் இடங்கள் அனைத்திலும் உம் இறையாட்சியின் மதிப்பீடுகள் விதைக்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட உதவ வேண்டுமென்றும், எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும், உலகப் பொருட்கள் மீதான நாட்டங்களில் இருந்து விலகி, உமக்கு உகந்த வாழ்வு வாழ்ந்து இறையாட்சியை உரிமையாக்கிக்கொள்ளும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**நம் குடும்பங்களுக்கா:**

எங்கும் நீங்காமல் நிறைந்திருக்கும் இறைவா! இன்று நாங்கள் காணும் நிதி நெருக்கடி, பொருளாதார ஏற்றத்தாழ்வின் காரணங்களைப் பார்த்தால், இன்று எமக்கு உடனடி தேவையாக இருப்பது எம் ஆற்றல்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள முன்வருவதுதான். அப்படிப் பகிர்ந்து கொள்வது எம் ஆற்றலை அதிகரிக்கின்றது என்பதை உணர்ந்து செயல்பட தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்..

**நலந்தரும் ஊற்றாம் இறைவா,**

உம்மை நம்பிக்கையோடு தேடி வரும் மக்களின் உடல் நோய்களையும், மன நோய்களையும் முழுமையாக குணப்படுத்தி, மற்றவர்களின் முன்னிலையில் உமது மாட்சிமிகு செயல்களின் சாட்சிகளாக அவர்களை மாற்ற வேண்டுமென்றும், உம் திருமகன் இயேசுவின் அன்பை வெளிப்படுத்தும் ஏற்றத்தாழ்வற்ற கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்குபவர்களாய் வாழும் அருளை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவர் மேலும் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**நீதியின் நாயகராம் இறைவா,**

நாங்கள் நிலை வாழ்வை உரிமையாக்கிக்கொள்ள, உம்முடைய நெறிமுறைகளைச் சரியான முறையில் கடைப்பிடித்து, தீமைகளை விட்டொழித்து, இரக்கமுடையோராய் புனித வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்றும், உமது வழியில் செல்ல எமக்குத் தடையாக இருப்பவற்றையும், எமது ஆன்மிக வாழ்வில் குறைவுபடுவதையும் நாம் கண்டுணர்ந்து, எமது வாழ்வை உமக்குகந்த வாழ்வாக மாற்றியமைத்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன் றாடுகின்றோம்.

**இளையோருக்காக :**

அன்புத் தந்தையே இறைவா! உமது அன்பையும், இரக்கத்தையும் பெற்று மகிழும் எம் இளைஞர்கள் உமது வார்த்தைக்கு மட்டுமே என்றும் பணிந்து உமது சாட்சிகளாய் வாழ அவர்களுக்கு அருள் தந்து அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டு மென்றும், இச்சமுதாய முன்னேற்றத்தில் உறுதுணையாக இருக்கும் இளையோரை நிறைவாக ஆசீர்வதித்து அவர்கள் இத்திருச்சபையின் வருங்காலத்தூண்களாக மாறவும், அருள் வாழ்விலும், உலகவாழ்விலும் செயலாற்றும் நம்பிக்கைக் கொண்டவராய் வாழ தேவையான அருளை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.